இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 01-11-2025

# தலைவரின் கட்டளை!

‘என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி’ என்ற முழக்கத்தை முன்னெடுத்து நடைபெற்ற பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையானது ‘கட்டளை’ உரையாக அமைந்திருந்தது.

**“இயங்கிக் கொண்டே இருந்தால்தான் அது இயக்கம்” என்பதை முன்னுரையாகச் சொல்லி, தொண்டர்களின் உழைப்பால் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரை இயக்கம் வெற்றி பெற்றதைச் சுட்டிக் காட்டினார். இரண்டு கோடிப் பேர் கழகத்தில் புதிய உறுப்பினர்களாகச் சேர்ந்திருப்பது சாதாரணமான சாதனை அல்ல. அந்தச் சாதனையை நிகழ்த்தியவர்கள் கழக உடன்பிறப்புகள்தான் என்று அவர்களுக்கு மகுடம் சூட்டினார். ‘சல்யூட்’ அடித்தார்.**

ஐந்து முறை கழகம் ஆட்சியில் இருந்துள்ளது. ஆறாவது முறையும் ஆட்சியில் அமர்த்திய பெருமை கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களையே சாரும். 2019 ஆம் ஆண்டு முதல் அவர் எதிர்கொண்ட தேர்தல் அனைத்திலும் வெற்றி பெற்று வருகிறார்.

**இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள், ஒரு சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள், இடைத்தேர்தல்கள் ஆகிய அனைத்திலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று வருகிறது. அதிலும் குறிப்பாக நாடாளுமன்றத் தேர்தலில் 100 விழுக்காடு வெற்றியைப் பெற்றுத் தந்தார். அத்தகைய வெற்றியை நோக்கிய பயணமாகத்தான் 2026 சட்டமன்றத் தேர்தல் அமைந்துள்ளது.**

‘வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’ என்ற இலக்கை தனக்குத் தானே வைத்துக் கொண்டு இயங்கி வருகிறார் தலைவர். அந்த இலக்கு நோக்கி தொண்டர்களையும் அழைத்துச் செல்கிறார் தலைவர். ஒவ்வொரு வாக்குச் சாவடியையும் உன்னிப்பாகக் கவனித்து அத்தனை பேர் வாக்குகளையும் கழகக் கூட்டணிக்குத் திருப்ப வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார்.

**“2026 ஆம் ஆண்டு நடைபெறப் போகும் தேர்தலிலும் நாம் தான் வெற்றி பெறப் போகிறோம். ஏழாவது முறையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்தது - திராவிட மாடல் ஆட்சியின் 2.0 தொடங்கியது என்ற வெற்றிச் செய்திதான் நமது காதில் விழப் போகிறது. மமதையால் சொல்லவில்லை. அடுத்த முறையும் தி.மு.க.தான் ஆட்சியில் அமையும் என்று நான் சொல்வது - என்னருமை உடன்பிறப்புகளான உங்கள் மீதுள்ள நம்பிக்கையால் சொல்கிறேன். தி.மு.க.வை யாராலும் தோற்கடிக்க முடியாது என்றால் - தி.மு.க. தொண்டனை யாராலும் தோற்கடிக்க முடியாது என்பதுதான் அதன் பொருள்” என்று அவரது சொற்கள் ஒவ்வொன்றும் உற்சாகச் சொற்களாக மட்டுமல்ல, உண்மைச் சொற்களாகவும் அமைந்துள்ளன.**

கழகத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் தேர்தல் களத்தில் ஆற்றும் பணி, வேறு எந்த இயக்கத்தாலும் நெருங்க முடியாத பணியாக அமையும். “உதயசூரியன்தான் வேட்பாளர், தலைவர்தான் வேட்பாளர்” என்ற இலக்குடன் கழகத் தொண்டர்கள் பணியாற்றுவார்கள். எந்த விதமான திசை திருப்பலுக்கும் இடமில்லாத வகையில் நேர்கொண்ட பார்வையுடன் இலக்கை நோக்கிப் பயணித்து வெற்றியைப் பெறுவார்கள். அதனால்தான் தொண்டர்கள் மீது நம்பிக்கையை வைத்து, தனது வெற்றியின் இலக்கை தலைவர் குறிக்கிறார்.

கடந்த நான்கரை ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகள் அனைத்தும் கோடிக்கணக்கான மக்களின் இல்லத்திலும் உள்ளத்திலும் போய் சேர்ந்துவிட்டது. ஒவ்வொரு தனி மனிதரின் கோரிக்கையையும் எண்ணத்தையும் நிறைவேற்றிக் கொடுத்து வருகிறார் முதலமைச்சர். பயன்பெற்ற மக்கள் தங்களது நன்றியை வாக்குகளாகச் செலுத்தத் தயாராகி வருகிறார்கள்.

இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக - ஒன்றிய பா.ஜ.க. அரசின் புள்ளிவிபரங்களின்படி தமிழ்நாட்டை உயர்த்திய சாதனையைச் செய்தது யார்? திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் செய்துள்ளது. 2021 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னால் தரப்பட்ட வாக்குறுதிகள் 505. அதில் 404 வாக்குறுதிகளை நான்கரை ஆண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனையைச் செய்தது யார்?

திராவிட மாடல் அரசுதான் செய்துள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 விழுக்காடு ஆகிவிட்டது. இந்தியாவில் இத்தகைய சாதனையை எந்த அரசும் செய்ததில்லை என்ற வகையில் சாதனைகளை முதலமைச்சர் செய்துள்ளார்கள்.

இவை அனைத்தையும் நேரில் பார்க்கும் மக்கள், மனமுவந்து ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தின் மூலமாக கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர முன் வந்துள்ளார்கள். இரண்டு கோடிப் பேரை உறுப்பினர் ஆக்கியது, யாரும் செய்யாத சாதனை ஆகும். இது யாராலும் செய்ய முடியாத சாதனை ஆகும்.

இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், கழக ஆட்சியின் மீதும், மாண்புமிகு முதலமைச்சர் மீதும் மக்கள் வைத்துள்ள நல்ல நம்பிக்கையின் அடையாளமாக அமைந்துள்ளது. சாட்சியமாக அமைந்துள்ளது. இந்த நம்பிக்கையை வாக்குகளாக மாற்ற வேண்டும் என்பதே தலைவரின் கட்டளையாகும்.

**“உங்கள் அனைவரையும் ஒருமுகமாக நான் பார்க்கிறேன். உங்கள் முகங்களில் நான் உதய சூரியனைப் பார்க்கிறேன். அதனைத் தமிழ்நாட்டு மக்களின் இதயசூரியனாக மாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் உங்களுக்குத் தான் இருக்கிறது” என்று வெற்றிக்குப் பொறுப்பாளிகளாக உடன்பிறப்புகளை ஆக்கி இருக்கிறார் தலைவர்.**

“என்னுடைய வாக்குச்சாவடியில் தி.மு.க. கூட்டணியை வெற்றி பெறச் செய்வேன் என ஒவ்வொரு கழக உடன்பிறப்பும், உறுதியேற்று, களப்பணியாற்றினால், எல்லா வாக்குச்சாவடிகளிலும் முன்னிலை பெற்று, 2026-இல் ஏழாவது முறையாக கழக ஆட்சி அமைவது உறுதியாகிவிடும்” என்பதை திரும்பத் திரும்ப நினைவூட்டி இருக்கிறார். அப்படியானால் அடுத்து வரப் போகும் ஒவ்வொரு நாளும் இதே இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்று தொண்டர்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்.

தமிழ்நாடு இப்போது சமூக, அரசியல், பொருளாதாரப் படையெடுப்பைச் சந்தித்து வருகிறது. அதில் இருந்து தமிழ்நாட்டு மக்களைக் காக்கவே தலைவர் அவர்கள் அறைகூவல் விடுத்துள்ளார்கள்.

2021 தேர்தல் தமிழ்நாட்டை கொத்தடிமை அ.தி.மு.க. கூட்டத்தில் இருந்து மீட்ட தேர்தல் என்றும், 2026 தேர்தல் என்பது தமிழ்நாட்டை பா.ஜ.க. - அ.தி.மு.க. கும்பலிடம் இருந்து பாதுகாக்கும் தேர்தல் என்றும் உருவகப்படுத்தி இருப்பதுதான், எதிர்வரும் தேர்தலில் மனதில் கொள்ள வேண்டிய அரசியல் ஆகும்.

**“ஐந்தாண்டு காலம் வளப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டை கபளீகரம் செய்து நாசப்படுத்தத் திட்டமிடும் கூட்டத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தியாக வேண்டும்” என்பதே இறுதியான உறுதியான இலக்கு ஆகும்.**

தலைவரின் கட்டளையைக் கண்போல் காத்து செயல்பட உடன்பிறப்புகள் அனைவரும் உறுதி ஏற்றுச் செயல்பட வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.10.2025) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், திருமதி. பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நவாஸ்கனி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராம.கருமாணிக்கம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் – மாமன்னர்கள்

# மருது பாண்டியர்கள் திருவுருவச் சிலைகளுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்,பி., அமைச்சர்கள் – கழகத்தினர் பங்கேற்பு!

மதுரை, நவ. 1 - கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குரு பூஜை விழாவில் பங்கேற்க மதுரை வந்தார்.

அதுசமயம் மதுரையில் இருந்து பசும்பொன் கிராமத்தில் நடைபெறும் தேவர் திருமகனாரின் குரு பூஜையில் பங்கேற்க செல்வதற்கு முன்பாக மதுரை கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட பிரம்மாண்டமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் முழு உருவ வெங்கல சிலைக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் திருவுருவச் சிலைக்கு கீழ் அமைக்கப் பட்டிருந்த தேவர் திருமகனார் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு மதுரை தெப்பக்குளத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் திறக்கப் பட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் மாமன்னர்கள் மருதுபாண்டிய சகோதரர்களின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பசும்பொன் சென்றார்.

சிறப்புமிக்க இந்நிகழ்வுகளில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர்கள் கே.என். நேரு, ஐ.பெரியசாமி, கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, ஆர்.எஸ்.ராஜ. கண்ணப்பன், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், கீதா ஜீவன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாஷா என்ற முத்து ராமலிங்கம் எம்.எல்.ஏ.,

முன்னாள் அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், கழகத் தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, கழக தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், மதுரை வடக்கு மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் ஜி.பி. ராஜா, இன்பாரகு, முன்னாள் எம்.எல்.ஏ. முத்துராமலிங்கம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.இளங்கோ, உசிலம்பட்டி நகரச் செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# பெரம்பூர் போக்குவரத்துப் பணிமனைக்கு அடிப்படை வசதி!

## அமைச்சர்கள் சா.சி. சிவசங்கர் – பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, நவ. 1- முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, 29.10.2025 அன்று போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு74, கிருஷ்ணதாஸ் சாலையில் உள்ள பெரம்பூர் போக்குவரத்து பணிமனை வளாகப் பகுதி முழுவதும் நடந்து சென்று பார்வையிட்டு, பணிமனையில் வடகிழக்குப் பருவமழையின் போது மழைநீர் தங்குதடையின்றி செல்வது, அடிப்படை வசதி ஏற்படுத்துதல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக போக்குவரத்துத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், வருவாய்த்துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகிய துறைகளின் அலுவலர்களுடன் கலந்துரையாடி பணிகளை விரைவில் தொடங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்

பின்னர், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் / சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள் ஆகியோர் திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு 74, கிருஷ்ணதாஸ் சாலை அருகே காலியாக உள்ள டான்சிக்குச் சொந்தமான இடத்தை நேரில் பார்வையிட்டு, அவ்விடத்தில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் / சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள், திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு76, பெரம்பூர், மங்களபுரம், குளக்கரை சாலையில் மழை மற்றும் வாகனப் போக்குவரத்தால் சேதமடைந்த கழிவுநீர் செல்லும் கால்வாயினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, உடனடியாக சீரமைத்திட சென்னை குடிநீர் வாரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-74, கிருஷ்ணதாஸ் சாலை, 4-வது தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் புதியதாக கட்டப்பட்டு வரும் சென்னை தொடக்கப்பள்ளியின் கட்டடப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பணியை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், அப்பகுதியிலேயே செயல்பட்டு வரும் குழந்தைகள் மையத்தினை பார்வையிட்டு குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவு மற்றும் குழந்தைகளுக்கு செவிலியர்கள் மூலமாக சொட்டு மருந்து வழங்கப்படுவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு76, செல்லப்பா தெரு, கொசப்பேட்டையில் உள்ள பட்டேல் பூங்காவினை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் / சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள் பார்வையிட்டு பூங்காவினை தூய்மையாகப் பராமரித்திடவும் பருவமழை காலத்தில் மழைநீர் தேங்காதவாறு உடனுக்குடன் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பூங்காவில் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு76, கொசப்பேட்டை செல்லப்பா தெருவில் செயல்பட்டு வரும் சென்னை தொடக்கப்பள்ளியை பார்வையிட்டு பழைய பள்ளி கட்டடத்தை பாதுகாப்பாக இடித்து அகற்றுவது தொடர்பாகவும், அந்த இடத்தில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவது தொடர்பாகவும் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கினார்.

தொடர்ந்து வார்டு 76, பொன்னியம்மன் கோயில் 2வது தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு மிக பழமை வாய்ந்து இருப்பதால், அக்குடியிருப்பு கட்டடத்தை பாதுகாப்பாக இடித்து அகற்றுவது தொடர்பாகவும் அக்குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு மாற்று குடியிருப்பு வழங்குவது குறித்து குடியிருப்புவாசிகள் மற்றும் அலுவலர்களுடன் அமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

பின்னர், வார்டு75, பிரிக்ளின் சாலை, எஸ்.எஸ்.புரம் சந்திப்பு பகுதியில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து பொது மக்களுக்கு வழங்கப்படும் மழைக்கால மருத்துவ சேவைகளை பார்வையிட்டார். பின்னர், 10 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும் 12 மருத்துவ பயனாளர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகத்தினையும் வழங்கினார். மேலும், இம்முகாமில் கலந்து கொண்டஅனை வருக்கும் மருந்து, மாத்திரைகளுடன், ரொட்டி, பால், பிஸ்கெட், பழங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, மேயர் திருமதி.ஆர். பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி எல்.ரமணி, திருமதி எஸ்.தமிழ்செல்வி, மாநகர போக்குவரத்து கழக மேலாண் இணை இயக்குநர் சுந்தர பாண்டியன், சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சு.கீதா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், காட்டுமன்னார்கோயில் எம்.ஆர்.கே கலையரங்கத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.